**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 23-ம் நாள்
2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ம் நாள் வியாழன்கிழமை

******

**இடைமனு எண். 12/2025-ல் - அசல் வழக்கு எண். 132/2014**

ரவிச்சந்திரன் .....மனுதாரர்/ 1-ம் பிரதிவாதி

**...எதிராக...**

1. ஜெயலட்சுமி .....எதிர்மனுதாரர்/ வாதி
2. சுப்பு (இறந்தார்)
3. அய்யாபிள்ளை
4. கலியபெருமாள்
5. ராஜாராமன் (இறந்தார்)
6. முத்துசெல்வி
7. ஹரிஹரன்
8. காயத்திரி (எ) மணிமொழி .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 23.09.2025அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு R.சோயோன் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாதி தரப்பில் வா.சா.1-ன் சாட்சியத்தை Re-open செய்து உத்தரவிடக்கோரி இம்மனு உ.வி.மு.ச. பிரிவு 151-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மேற்படி அசல் வழக்கில்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:29:20 +0530

கடந்த 10.06.2025 அன்று வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர் வழக்கை வலுப்படுத்த, மனுதாரர் தரப்பில் சில முக்கியமான கேள்விகளை வா.சா.1–டம் கேட்க வேண்டும். எனவே மனுதாரர் தரப்பில் வா.சா.1–ஐ Re–Call செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையேல் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை. எனவே அசல் வழக்கில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாதி தரப்பில் வா.சா.1–ன் சாட்சியத்தை Re–open செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

(i) மனுவில் வாதியை ரீகால் செய்ய சரியான காரணம் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் என்ன காரணத்திற்காக PW1–ஐ ரீ–கால், ரீ–ஓப்பன் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை. PW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசங்கள் பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் வழங்கப்பட்டு அந்த வாய்தாக்களில் PW1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு தற்பொழுது PW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி சரியல்ல.

(ii) அசல் வழக்கானது 2014–ம் ஆண்டு வழக்காகும். அந்த வழக்கில் நல்ல கட்சி இல்லாத பிரதிவாதிகள் வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கில் PW1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் விட்டுவிட்டு தற்பொழுது பொய்யான காரணம் கூறி நீதிமன்றத்தின் நேரத்தையும், காலத்தையும் வீணடிக்கும் நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:29:29 +0530

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

5. தீர்வு:

(i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் விளம்பல் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் 10.06.2025 அன்று இறுதி வாய்ப்பு கொடுக்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யததால் வா.சா.1–ன் குறுக்கு விசாரணை இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது. எனவே அசல் வழக்கில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாதி தரப்பில் வா.சா.1–ன் சாட்சியத்தை Re–open செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) 1–ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் PW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசங்கள் பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் வழங்கப்பட்டு அந்த வாய்தாக்களில் PW1–ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் வேண்டுமென்றே விட்டுவிட்டு வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கில் தற்பொழுது PW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி சரியல்ல என்றும், எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:29:36 +0530

விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இருப்பினும், Re-open செய்ய கோரும் இம்மனுவினை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** மனுதாரர்/1-ம் பிரதிவாதி, 1-ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) 16.10.2025-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 17.10.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:29:43 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | - இல்லை - |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.09 18:29:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.12/2025-ல்
அசல் வழக்கு எண்.132/2014
நாள்.09.10.2025.